RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 4 | ஜனவரி.9 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ரூ.3,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத்தொகுப்பு

## முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை: ஜன.9-

ரூ.3,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆலந்தூரில் தொடங்கி வைத்தார்.



பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாட 2 கோடியே 22 லட்சத்து 91,710 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வாழும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகியற்றுடன் ரூ.3,000 ரொக்கத்துடன் சேர்த்து வழங்கும் பணியை சென்னை ஆலந்தூரில் நேற்று (வியாழக்கிழமை) காலை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, தமிழச்சி தங்கபாண்டியன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மற்ற மாவட்டங்களில் ரொக்கப் பணம் ரூ.3,000, பொங்கல் பொருள்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு அமைச்சர்கள் வழங்கி பணியை நேற்று தொடங்கி வைக்கின்றனர். பொங்கல் தொகுப்புடன் விலையில்லா வேட்டி, சேலைகளும் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் வழங்கப்படுகிறது.

முன்னதாக இதற்கான டோக்கன் விநியோகம் கடந்த திங்கள் அன்று தொடங்கியது. நியாயவிலைக் கடைபணியாளர்கள் வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகித்தனர். இதுதவிர, கடைகளுக்குப் பொருட்கள் வாங்க வருவோரிடமும் டோக்கன்கள் வழங்கினர்.

# சமுத்ர பிரதாப் கப்பல் சுய சார்பை வலுப்படுத்தும்: பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி, ஜன.9-

'சமுத்ர பிரதாப்' கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது, நமது சுயசார்பு பார்வையை வலுப்படுத்தும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்து உள்ளார்.இந்தியக் கடலோர காவல் படையின் ஐ.சி.ஜி.எஸ். சமுத்ர பிரதாப் என்ற கப்பலை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 5ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது இந்தியாவின் முதல், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மாசு கட்டுப்பாட்டு கப்பல் ஆகும்.இதுகுறித்து




பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "இந்தியக் கடலோர காவல் படையின் 'சமுத்ர பிரதாப்' கப்பல் சேவையில் இணைக்கப்பட்டது பல காரணங்களுக்காகக் குறிப்பிடத்தக்கது. இது நமது சுய சார்பு பார்வையை வலுப்படுத்துவதுடன், நமது பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்துகிறது. மேலும், சுற்றுச் சூழலைப் பேணுவதில் நமது உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது" என கூறப்பட்டுள்ளது.

# "தந்தைக்கு துரோகம் செய்த அன்புமணிக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்" ராமதாஸ்

சென்னை, ஜன.9-

"தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்தக் கும்பலுக்கு ஓட்டுபோடுவதா என்று மக்கள் அன்புமணிக்கு ஓட்டு போடமாட்டார்கள்" என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று சொல்வார்கள். ஆனால் தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்த கும்பலுக்கா ஓட்டுபோடுவது என்று மக்கள் அன்புமணிக்கு ஓட்டுப்போடமாட்டார்கள்.

பாமக நான் உருவாக்கிய கட்சி. இதற்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது. என்னிடம் இருந்து கட்சியைப் பறிப்பதற்கு சதித் திட்டம் தீட்டி சூழ்ச்சியோடு அன்புமணி செயல்படுவதை மக்கள் அறிவார்கள்.

அன்புமணி சிவில் நீதிமன்றத்துக்கு வேண்டுமானால் செல்லலாம். அன்புமணி கூட்டணி பேசுவது ஒரு கூத்து, நாடகம். என் தலைமையில்தான் கூட்டணி பற்றி பேச முடியும். நான் அமைப்பதே பாமக கூட்டணி. நான் சேரும் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். கட்சி என்னிடம்தான் உள்ளது. அன்புமணி பாமகவில் இல்லை. பாமகவின் நிறுவனர் மற்றும் தலைவர் பதவியை நானே எடுத்துக் கொண்டேன்.

நான் செய்த சத்தியத்தை மீறி அன்புமணியை மத்திய அமைச்சர் ஆக்கினேன். அன்புமணி எனக்கு வேட்டு வைப்பார் என்று எனக்கு முன்பே தெரியவில்லை. நான் ஆரம்பித்த கட்சியை உரிமை கொண்டாட யாருக்கும் தகுதியில்லை.

அன்புமணி செய்த தில்லுமுல்லு காரணமாகவே பாமகவில் இருந்து அவரை நீக்கினேன். ஒரு கோஷ்டியை வைத்துக்கொண்டு என்னை மோசமாக விமர்சித்தனர். தந்தைக்கு துரோகம் இழைத்த நபருக்கு யார் ஓட்டுப் போடுவார்கள். அன்புமணியின் கூட்டணி பேச்சுவார்த்தை நீதிமன்ற அவமதிப்பு. கூட்டணி விவகாரம் குறித்து இரண்டு நாட்களுக்குள் முடிவு தெரிவிக்கப்படும். அது தேசிய அளவிலான கூட்டணியாக இருக்கலாம், திராவிடமாக இருக்கலாம் அல்லது தமிழக கட்சியாக இருக்கலாம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பர்தா அணிந்து முகத்தை மூடி கடைக்கு வர தடை: திருட்டை தடுக்க பிஹார் தங்க நகை வியாபாரிகள் நடவடிக்கை

புதுடெல்லி, ஜன.9-

பிஹாரில் ஹிஜாப், பர்தா உள்ளிட்டவை அணிந்து முகத்தை மூடிய படி வரும் வாடிக்கையாளர்களுக்கு நகை வியாபாரிகள் தடை விதித்துள்ளனர்.



நாட்டில் தங்கம் மற்றும் வெள்ளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதே சமயம் நகைக்கடைகளில் தங்கம் திருட்டும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் நகைத் திருட்டை தடுக்கும் பொருட்டு அகில இந்திய நகைக்கடை மற்றும் பொற்கொல்லர் கூட்டமைப்பின் (ஏஐஜேஜிஎப்) பிஹார் பிரிவு ஒரு புதிய முடிவை எடுத்துள்ளது.

இதன்படி, முகத்தை முழுவதுமாக மூடிய படி கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு நகை விற்பனை செய்வதும் அவர்களை கடைக்குள் அனுமதிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஏஐஜேஜிஎப் கூட்டமைப்பின் பிஹார் மாநிலத் தலைவர் அசோக் குமார் வர்மா கூறும்போது,"பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நகைகள் மதிப்பு மிகுந்த பொருளாக மாறி விட்டன. ஒரு சவரன் தங்கம் ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது. வெள்ளி ஒரு கிராம் விலை ரூ.300ஐ நெருங்கியுள்ளது. இந்த சூழலில் வாடிக்கையாளர்கள் ஹெல்மெட், முக்காடு, ஹிஜாப், பர்தா, நகாப் உள்ளிட் டவை அணிந்து வரும்போது சிக்கல் எழுகிறது.

இவர்கள் மூன்று, நான்கு பேர் கொண்ட குழுவாக நகைக் கடையில் கொள்ளையில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. பல மாநிலங்களில், பர்தா அணிந்த கொள்ளையர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். கடைக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கவே இந்த புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

முக்காடு, ஹிஜாப், நகாப், பர்தா உள்ளிட்டவற்றை அகற்றுவது எங்கள் நோக்கம் அல்ல. இவற்றை அணிந்துள்ள வாடிக்கையாளர்கள் கடைக்குள் வருவதற்கு முன்தங்கள் முகத்தை காட்ட வேண்டும் என்று கோருவதே எங்கள் நோக்கம்" என்றார். இந்த அறிவிப்புக்கு பிஹாரின் காவல் துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் விவகாரம்: இந்தியாவுக்கு 500% வரி விதிக்கும் மசோதாவுக்கு ட்ரம்ப் ஒப்புதல்

*வாஷிங்டன், ஜன.9–*

*ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதால், இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான வரியை 500% உயர்த்த வழிவகுக்கும் மசோதாவுக்கு அந்நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆதரவு அளித்திருப்பதாக குடியரசு கட்சியின் செனட்டர் லிண்ட்சே கிரஹாம் தெரிவித்துள்ளார்.*



*அமெரிக்க அதிபர் தேர்தலின்போது, தான் அதிபரானால் உக்ரைன் ரஷ்யா போரை 24 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வருவேன் என உறுதி அளித்தார் டொனால்டு ட்ரம்ப். ஆனால், இதுவரை போர் முடிவுக்கு வரவில்லை. ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாக போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ட்ரம்ப்பின் முயற்சிகள் முழு அளவில் பலன் தரவில்லை.*

*இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500% இறக்குமதி வரி விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. குடியரசு கட்சியின் செனட்டரும் ட்ரம்ப்பின் பாதுகாப்பு கொள்கைகளுக்கான ஆதரவாளருமான லிண்ட்சே கிரஹாம், ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ரிச்சர்ட் ப்ளூமென்தால் ஆகியோர் இணைந்து இதற்கான மசோதாவை தயாரித்துள்ளனர்.*

*கிரஹாம்ப்ளூமென்தால் மசோதா என்று அழைக்கப்படும் இந்த மசோதாவை அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அதிபர் டொனால்டு ட்ரம்ப் பச்சைக் கொடி காட்டி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.*

*அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை, லிண்ட்சே கிரஹாம் நேற்று (புதன்கிழமை) சந்தித்ததாகவும், அப்போது பல மாதங்களாக உருவாக்கப்பட்டு வரும் இந்த மசோதாவுக்கு அதிபர் தனது ஆதரவை தெரிவித்ததாகவும் கிரஹாம் கூறியதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். போரை முடிவுக்குக் கொண்டு வர உக்ரைன் பல சலுகைகளை வழங்கி வரும் நிலையிலும், ரஷ்ய அதிபர் புதின் தொடர்ந்து அப்பாவி மக்களை கொல்வதால் இது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று கிரஹாம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இந்த மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அது சட்டமாக மாறும். அதன்பிறகு ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கான ஏற்றுமதிக்கு 500% வரி விதிப்பு உறுதிப்படுத்தப்படும்.*

*எனவே, இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.*

# சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம்: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

சென்னை, ஜன.9-

காலமுறை ஊதியம், மற்றும் சிறப்பு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கக் கோரி சத்துணவு அங்கன்வாடி ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகே நேற்று நடந்தது.



அக் கூட்டமைப்பின் அமைப்பாளர் இ.மாயமலை தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்கள் அங்கன்வாடி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் மாயமலை கூறியதாவது: சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கான சிறப்பூதியம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.6,750 ஆக உயர்த்தி வழங்கப்படும். அதோடு பணிக்கொடை ரூ.5 லட்சம் வழங்கப்படும் என திமுக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது.

அதை நம்பி நாங்களுக்கும் வாக்களித்தோம். ஆனால், ஆட்சிக்கு வந்து நான்கரை ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் எங்களின் ஒரு கோரிக்கையைகூட அரசு நிறைவேற்றவில்லை. முதல்வர் வெளியிட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தால் எங்களுக்கு எந்த பயனும் கிடைக்காது.

12 லட்சம் அரசு ஊழியர்களில் முக்கால்வாசி பேர் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள்தான். ஓய்வூதிய விஷயத்தில் சத்துணவு ஊழியர்களையும், அங்கன்வாடி பணியாளர்களையும் அரசு பாகுபாடுடன் நடத்துகிறது.பிப்.3 முதல் பணி புறக்கணிப்பு: காலமுறை ஊதியம், ஓய்வூதியத்தை ரூ.6,750 ஆக உயர்த்தி வழங்குவது, பணிக்கொடை ரூ.5 லட்சம், காலியாகவுள்ள 60 ஆயிரம் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர் இடங்களை நிரப்புவது, அரசு ஊழியர்களைப் போன்று 12 மாத மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜன.30ம் தேதி அன்று சென்னையில் லட்சக்கணக்கான சத்துணவு பணியாளர்களும் அங்கன்வாடி ஊழியர்களையும் திரட்டி முதல்வர் அலுவலகத்தில் முறையீடு செய்வோம். எங்கள் கோரிக்கைகளையும், திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளையும், உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புகளையும் நிறை வேற்றாவிட்டால் பிப்.3ம் தேதி முதல் பணிகளைப் புறக்கணித்துவிட்டு காலவரையற்ற தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்திலும், தொடர் மறியல் போராட்டத்திலும் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜெஸி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க நியாயவிலைக்கடையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கதமிழ்ச்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.சரவணகுமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு மற்றும் ரூ.3000/ ரொக்கத்தொகையுடன் கூடிய பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கினார்கள்.



■ தஞ்சாவூர் தொகுதிக்கு உட்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண் 2 கரந்தை பூக்குளம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக ரேஷன் கடை வழங்கப்பட்டு இன்று மக்கள் பயன்பாட்டிற்காக தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு TKG.நீலமேகம் MLA அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர்கள் RK.நீலகண்டன் Mc, பொதுக்குழு உறுப்பினர் திரு.N.தர்மராஜன், திரு.SB. ரவி Ex Mc மாமன்ற உறுப்பினர்கள் G.கலையரசன் Mc, G.ஆனந்த் Mc, திரு அண்ணா பிரகாஷ் Mc, உஷா Mc, C.விஜயபாபு Mc, KKR. ஐயப்பன் Mc திருமதி.அமுதவள்ளி, TG.தனவள்ளி Ex Mc, வட்ட கழக நிர்வாகிகள் M.ஜெகன் சசிகுமார் S.பெரியசாமி, திரு தம்பா. இராமச்சந்திரன், திரு கிங்ஸ். சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.




தாம்பரம் மாநகராட்சி 50வது வார்டுக்கு உட்பட்ட ரங்கநாதபுரத்தில் உள்ள ரேசன் கடையில்

## தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பினை மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுசெயலாளர் எம்.யாக்கூப் வழங்கினார்

தாம்பரம், ஜன.09-

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி ஆண்டுதோறும் அரசு சார்பில் பொங்கல் பரிசு தொகுப்பு வழக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2026ம் ஆண்டு தைப் பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அரிசி ரேஷன் கார்டுதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்துடன், பச்சரிசி மற்றும் சக்கரை, முழு கரும்புடன் பொங்கல் தொகுப்பினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை ஆலந்தூரில் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி தாம்பரம் மாநகராட்சிக்குபட்ட மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரம் பகுதிகளிலும் பொங்கல் பரிசு தொகுப்புகள் பல்வேறு ரேசன் கடைகளில் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அரிசி ரேஷன் கார்டுதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்துடன், பச்சரிசி மற்றும் சக்கரை, முழு கரும்புடன் பொங்கல் தொகுப்பினை தாம்பரம் மாநகராட்சிக்குபட்ட 50வது வார்டுக்குட்பட்ட மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் பகுதி பொங்கல் பரிசு தொகுப்புகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு 50வது வார்டு மாமன்ற உறுப்பினரும், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுசெயலாளருமான எம்.யாக்கூப் தலைமை தாங்கி பொதுமக்களுக்கு பொங்கள் பரிசு தொகுப்பினை வழங்கினார்.

பொங்கள் பரிசினை பெறுவதற்காக வருகை தரும் பொதுமக்கள் சிரமின்றி வாங்கும் வகையில் பந்தல், ஷேர் அமைத்து கொடுத்து, தண்ணீர் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு சமய சார்பின்றி தமிழகத்தில் இந்துகள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் சமத்துவ பொங்கல் கொண்டாடும் வகையில் பொங்கள் தொகுப்பினை வழங்கி முதல்வர் முக.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிப்பதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ஜாஹீர் உசேன், திராவிட கழக மாவட்ட தலைவர் முத்தையன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகிய பொங்கல் பரிசு தொகையுடன், ரூ.3,000/ ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளையும் வழங்கும் நிகழ்ச்சியை காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரம் வசந்தம் நகரில் உள்ள R6 நியாய விலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3,000/ ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளையும் வழங்கினார்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படவுள்ள முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - 'இது நம்ம ஆட்டம் 2026 போட்டிகளுக்கான இணையதள முன் பதிவு தொடக்கம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தகவல்

தேனி, ஜன.09-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைய தலைமுறையினரின் சமூக முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு, சமூக இணைப்பு மற்றும் உடல், மன ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் 22.01.2026 முதல் 08.02.2026 வரை தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - "இது நம்ம ஆட்டம் ஞ 2026" போட்டிகள் நடத்த உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் 16 வயது முதல் 35 வயது வரையிலான தகுதியுடைய அனைத்து இளைஞர்களும் பங்கேற்கும் வகையில் ஊராட்சி ஒன்றிய அளவில் போட்டிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் முதலிடம் பெறும் வீரர்/ வீராங்கனைகள் மற்றும் அணிகள் மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள தகுதிபெறுவர்.

ஊராட்சி ஒன்றிய அளவில் (தடகளம், கபடி, கையுந்து பந்து, கேரம், கயிறு இழுத்தல் - (ஆண்கள்/பெண்கள்), ஸ்ட்ரீட் கிரிக்கெட் (ஆண்களுக்கு மட்டும்), எறிபந்து(பெண்களுக்கு மட்டும்) மொத்தமாக 7 வகையான போட்டிகள்,

மாவட்ட அளவில் (தடகளம், கபடி, கையுந்து பந்து, கேரம், கயிறு இழுத்தல். ஓவியப்போட்டி, கோலப்போட்டி- (ஆண்கள்/ பெண்கள்), ஸ்ட்ரீட் கிரிக்கெட் (ஆண்களுக்கு மட்டும்) எறிபந்து (பெண்களுக்கு மட்டும்), மாற்றுத் திறனாளிகளுக்கு Physically Challenged (100M), Visually Challenged (Shotput), Intellectually Challenged (100M), Hearing Impaired (100M) என 13 வகையான போட்டிகளும்,

மாவட்ட அளவில் ஸ்ட்ரீட் கிரிக்கெட் (ஆண்கள்), மற்றும் கபடி (பெண்கள்) ஆகிய 2 விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெறுவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பார்கள். இப்போட்டிகளில் வெற்றியாளர்களுக்கு பரிசுதொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாநில அளவில் குழுப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.75,000/, இரண்டாம் பரிசாக ரூ.50,000/, மூன்றாம் பரிசாக ரூ.25,000/ வழங்கப்படும். மாவட்ட அளவில் தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.6000/, இரண்டாம் பரிசாக ரூ.4000/, மூன்றாம் பரிசாக தலா ரூ. 2000/ பரிசுத்தொயையும்,

ஊராட்சி ஒன்றிய அளவில் தனிநபர் மற்றும் குழுபோட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.3000/, இரண்டாம் பரிசாக தலா ரூ.2000/, மூன்றாம் பரிசாக தலா ரூ. 1000/ ,பரிசாக வழங்கப்பட உள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் 16 வயது (31.12.2009) முதல் 35 வயது (01.01.1991) வரை அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விளையாட்டில் ஆர்வம் உள்ள அனைவரும் போட்டிகளில் பங்கேற்க 06.01.2026 முதல் 21.01.2026 மாலை 5.00 மணிக்குள் <https://cmyouthfestival.sdat.in/>, <https://sdat.tn.gov.in/> என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தேனி மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். கூடுதல் விபரங்களுக்கு "ஆடுகளம்" தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## கிழக்கு தாம்பரம் இரும்புலியூர் நியாய விலை கடையில் தமிழ்க அரசு அறிவித்த பொங்கல் தொகுப்பினை சேர்மன் இந்திரன் துவக்கி வைத்தார்

தாம்பரம், ஜன.09-

கிண்டி பட்ரோடு பகுதியில் உள்ள நியாய விலை கடையில் பொங்கல் பண்டிகையொட்டி தமிழக முதலமைச்சரால் ரேசன் அட்டை தாரர்களுக்கு அறிவித்த பொங்கல் தொகுப்பு, வேட்டி சேலை ஆகியோவற்றை பயனாளிகளுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள துவங்கி வைத்தது அடுத்து செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர 62,48,46,45,63 உள்ளிட்ட வார்டு பகுதிகளில் உள்ள நியாய விலை கடையில் பொங்கல் தொகுப்புனை தாம்பரம் மாநகராட்சி ஐந்தாவுது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் அவர்கள் கலந்து கொண்டு ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பினை வழங்கி துவக்கி வைத்தார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் ஜோதிகுமார், ரமனி ஆதிமூலம், சசிகலா கார்த்திக் மற்றும் நிர்வாகிகள் முனுசாமி, கார்த்திக், லோகேஷ் குமார், பிரபாகரன், நசீர், செழியன், நசீர், சரவனண், தனசேகரன், கோமதி லோகநாதன், அப்பாதுரை, திரவியராஜ், பாஸ்கர், முரளி, பஞ்சாட்சரம், ரொனால்ட் ரொசாரியோ, கணேசன், ரமேஷ், சந்திரிகா, பாபு, தினேஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



1-வது மண்டலத்தில் நியாய விலை கடைகளில் பொதுமக்களுக்கு

## அரிசி, சக்கரை, கரும்பு, புத்தாடைகள் அடங்கிய பரிசு தொகுப்புகளுடன், ரூ.3000 பணமும் வழங்கி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார் மண்டல தலைவர் வே.கருணாநிதி

பம்மல், ஜன.09-

தமிழ்நாடு முழுவதும் பொங்கல் பரிசு தொகுப்புகளுடன், பரிசுத் தொகையையும் வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி அவர்கள் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் வார்டு எண் 10,11 நியாய விலை கடைகளில் பொதுமக்களுக்கு அரிசி, சக்கரை, கரும்பு, புத்தாடைகள் அடங்கிய பரிசு தொகுப்புகளுடன், ரூ. 3000 பணமும் வழங்கி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் தாம்பரம் மாநகராட்சி கணக்கு குழு தலைவர் ஏ.மதினா பேகம், வட்டக் கழக செயலாளர்கள் எம். சுகுமாரன், முகமது அப்பாஸ், பாக பொறுப்பாளர் வே.க.தன்ராஜ். மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனர்

# அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 1,061 மாணவர்களுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலான மடிக்கணினிகளை வழங்கினார்

கடலூர், ஜன.09-

கடலூர் மாவட்டம், வடலூர் மற்றும் சி.முட்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.சிந்தனைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் 1,061 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,96,28,500 மதிப்பீட்டிலான மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், குறிப்பாக அனைவரும் உயர்கல்வியினை அடையும் நோக்கிலும் பல்வேறு வகையான சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்த சந்தேக ங்களை போக்குவதற்காகவும், ஒவ்வொரு மாணவரும் தனக்கென ஒரு உயர்கல்வியினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட அனைத்து வகையான தகவல்களையும் வழங்கிடும் வகையில் நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்கள் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயிலும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை கடலூர் மாவட்டத்தில் 1,01,108 நபர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டதன் மூலம் 5,043 நபர் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது சி.முட்லூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மணிவண்ணன், கிருத்திகா ஆகிய மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சிபெற்று வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் உலகளாவிய அறிவினை வளர்த்து பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக "உலகம் உங்கள் கையில்" என்ற திட்டத்தின்கீழ் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் இறுதியாண்டு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உலகளவில் தரச்சான்று பெற்ற நிறுவனங்களின் மூலம் மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை சென்னையில் மாநில அளவில் 05.01.2026 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள்.

கடலூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக ரூ.18,500 மதிப்புள்ள மடிக்கணினி 25 அரசு கல்லூரிகளில் பயிலும் 8,228 மாணவர்களுக்கு ரூ.15.22 கோடி மதிப்பீட்டிலும், 3 அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் 823 மாணவர்களுக்கு ரூ.1.52 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 28 கல்லூரிகளில் பயிலும் 9,051 மாணவர்களுக்கு ரூ.16.75 கோடி மதிப்பீட்டிலான மடிக்கணினிகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டது.

இன்றைய தினம் வடலூர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 238 மாணக்கர்களுக்கும், சி.முட்லூர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 823 மாணக்கர்களுக்கும் என மொத்தம் 1,061 மாணவர்களுக்கு ரூ.1,96,28,500 மதிப்பீட்டிலான மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டாவது கட்டமாக மீதமுள்ள 136 தனியார் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச மடிக்கணினிகளை வேலை, கல்வி, பொழுது போக்கு, தகவல் தொடர்பு, கிராபிக்ஸ் வடிவமைப்பு, கேமிங் போன்ற பல பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இம்மடிக்கணினி சிறியதாகவும், எடை குறைவாகவும் இருப்பதால், மாணவர்கள் பயணத்தின்போதும், இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லவும் வசதியாக இருக்கும்.மாணவர்கள் உங்களுக்கு ஆன்லைன் வகுப்புகள், ஆராய்ச்சி, ப்ராஜெக்ட் வேலைகள், குறிப்புகள் எடுப்பதற்கும், எதிர்காலத்தில் வேலைக்கு செல்லும் போது அலுவலகப் பணிகளுக்காகவும் மிகுந்த பயனுள்ளதாக அமையும். எனவே, இம்மடிக்கணினிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு மாணவர்கள் தங்களது தனித்திறன்களை வளர்த்து உலகளாவிலான வேலைவாய்ப்பினை பெற்று உங்களது வாழ்வினை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு எல்லோருக்கும் எல்லாமான அரசாக செயல்படுகிறது

# கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000 வழங்கி, அமைச்சர்த.மனோ தங்கராஜ் பெருமிதம்

கன்னியாகுமரி, ஜன.09-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொங்கல் திருநாளை அனைத்து தரப்பட்ட மக்களும் மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000 வழங்கும் திட்டத்தினை சென்னை, ஆலந்தூர், பட்ரோடு நியாய விலைக் கடையில் அனைத்து குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் துவக்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள், முன்னிலையில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட முகிலன்விளை நியாயவிலைக்கடையில் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000யினை குடும்ப அரிசி அட்டைத்தாரர்களுக்கு வழங்கி பேசுகையில்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடைய தேவையை உணர்ந்து கேட்காமலேயே தருகின்ற குணத்தை கொண்டிருக்கின்ற ஈடு இணையற்ற தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டில் உள்ள அத்தனை குடும்பங்களும் பொங்கல் விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று தாய் உணர்வுடன் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசு தொகுப்பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ.3000/ ரொக்கம் சேர்த்து வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று சென்னை ஆலந்தூர் பகுதியிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தைத்தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 121 கூட்டுறவு நிறுவனங்களின் கீழ் செயல்படும் 581 நியாய விலைக்கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்படும் 135 நியாய விலைக்கடைகள், மீனவர் மற்றும் இதர கூட்டுறவின் கீழ் செயல்படும் 46 நியாய விலைக்கடைகள், சுயஉதவிக்குழுவால் நடத்தப்படும் 3 நியாய விலைக்கடைகள் என மொத்தம் 765 நியாய விலைக்கடைகளில் இணைக் ப்பட்டுள்ள 5,79,667 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 406 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் சேர்த்து 580073 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்று 08.01.2026 முதல் பொங்கலுக்கு முன்தினம் வரை வழங்கப்படும்.



பொது விநியோக த்திட்டம் என்பதே உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதற்கே ஆகும் இந்தியாவில் வாழக்கூடிய 140 கோடி மக்களுக்கும் பொது விநியோகத் திட்டம் இல்லை என்றால் இந்தியாவில் அனேக மக்களுக்கு உணவு பாதுகாப்பு என்பது இருக்காது. முன்பெல்லாம் இயற்கை பேரிடர்கள் நம்மை வாட்டி வதைக்கும் அத்தகைய காலங்களில் நமக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரேஷன் பொருட்கள் மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும் பஞ்சம் என்பது அதிகமாக நம்முடைய இந்தியாவில் இருந்தது. ஆனால் தற்போது இந்த பஞ்சம் குறைந்துள்ளது. அதற்கு காரணம் பொது விநியோகத்திட்டம் தான்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் தவறாது, குறித்த நேரத்தில் ரேசன் பொருட்களை பொதுமக்களுக்கும், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் வீடுகளுக்கே கொண்டு சேர்க்கின்ற அரசாக செயல் படுகிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் சமத்துவ பொங்கல் என்ற வார்த்தையை அறிமுகப் படுத்தி, ஒரே பந்தியில் அனைத்து தரப்பட்ட மக்களும் அமர்ந்து சாப்பிட வைத்து, இத்திட்டத்தினை செயல்படுத்தினார்கள்.

நம்முடைய வளர்ச்சி என்பது ஒற்றுமையில் தான் இருக்கிறது. எல்லாருக்கும் எல்லாம் என்பதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களும் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். பொங்கல் தொகுப்புடன் ரூபாய் 3000 வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட பொதுமக்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து பயனாளி ஒருவர் பொங்கல் தொகுப்புடன் ரூ.3000 வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு ஆணையத்தலைவர் திரு.என்.சுரேஷ் ராஜன், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ.விஜய் வசந்த், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜேஷ்குமார், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு.ரெ.மகேஷ், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் திருமதி.சிவகாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.புஷ்பாதேவி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்கலைமதி, துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத்திட்டம்) திரு.முருகன், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, வழக்கறிஞர் திரு.சிவராஜ், திரு.பூதலிங்கம், திரு.ஆனந்த், துறை அலுவலர்கள் பயனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

---

செங்கல்பட்டு மாவட்ட பள்ளிகளுக்கு இடையே மண்டல அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி போட்டியில்

## இரு பிரிவிலுகளில் கோவளம் அரசு பள்ளி மாணவர்கள் முதலிடம் பிடித்து கோப்பையை தட்டி சென்றனர்

செங்கல்பட்டு, ஜன.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கோவிலாஞ்சேரி, கலைஞர் விளையாட்டு திடலில் விநாயக மிஷன் பல்கலை கழக வேந்தர் ஏ.எஸ். கணேசன் கோப்பைகான செங்கல்பட்டு மாவட்ட பள்ளிகளுக்கு இடையே மண்டல அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி போட்டிகள் இன்று நடைப்பெற்றது. இதில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து 40க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த கபடி அணிகள் கலந்து கொண்டனர். நாக் அவுட் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டது.

இறுதிப்போட்டியில் கோவளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அணியும், குரோம்பேட்டை அரசு பெண்கள் மேல் நிலைபள்ளி அணியும் மோதின. இதில் கோவளம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அணி வெற்றி பெற்று கோப்பை தட்டி சென்றன. அதேபோல் ஆண்கள் அணியிலும் கோவளம் அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளி மற்றும், குரோம்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இடையே நடந்த போட்டியில் கோவளம் அரசு பள்ளி மாணவர்கள் அதிக புள்ளி எடுத்து வெற்றி பெற்றனர். முதல் 3 இடங்களை பிடித்த அணிகள் வரும் 9, 10 ஆகிய இரு நாட்கள் விநாயக மிஷன் பல்கலைகழகத்தில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு விளையாட தகுதி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழக செயலாளர் மு.வேல்முருகன், தலைவர் சிவமணி ஆகியோர் பரிசு தொகை தொகை, கோப்பை, சான்றிதழ் கவுரவித்சிவமணி, கோவளம் அரசு பள்ளி தலைமைதலைமை ஆசிரியர் நக்கீரன், கன்வீனர் சிமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்





■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே. ஆர்.பெரியகருப்பன் அவர்கள் முன்னிலையில், சென்னை ஆலந்தூர் நியாயவிலைக்கடையில் வழங்கி தொடங்கி வைத்துள்ளதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்வினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப., அவர்கள் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட இந்திராநகர் நியாயவிலைக்கடையில் தொடங்கி வைத்தார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.இராஜேந்திர பிரசாத், சிவகங்கை நகர்மன்றத்தலைவர் திரு.சி.எம்.துரை ஆனந்த், மாவட்ட வழங்கல் அலுவலர் (பொ) திரு.விஜயகுமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா உட்பட பலர் உள்ளனர்.

---

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 7,85,994 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.238.77 கோடி மதிப்பீட்டிலான பொங்கல் பரிசு வழங்கும் பணியினை தொடங்கி வைத்தார்

கடலூர், ஜன.09-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.சிந்தனைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி மீனாட்சிப்பேட்டை, புவனகிரி, சிதம்பரம், வல்லம்படுகை, குமராட்சி ஆகிய நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை இன்று (08.01.2026) வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும்வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்களின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார். கடலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 4,50,134 குடும்பத் தலைவிகளுக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விரிவாக்கத்தின் மூலம் 41,055 குடும்பத் தலைவிகளுக்கும் என மொத்தம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் 4,91,189 குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. பல்வேறு திட்டங்களின் மூலம் 1,40,000 நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதிய திட்டத்தில் ரூ.1,200 வீதம் வழங்கப்படுகிறது என மொத்தம் 6,31,189 நபர்கள் நேரடியாக பயன்பெற்று வருகின்றனர். மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனை முன்னெடுக்கும் பொருட்டு 8,948 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2026ஆம் ஆண்டிற்கான தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை பொதுமக்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்பதற்காக 1 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழு நீளகரும்பு மற்றும் ரொக்கம் ரூ.3,000 வீதம் பொங்கல் சிறப்பு தொகுப்பு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில் இன்றைய தினம் கடலூர் மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் 7,85,547 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், 447 இலங்கை தமிழர் அட்டைதாரர்களுக்கும் என மொத்தம் 7,85,994 குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழு நீளகரும்பு மற்றும் ரொக்கம் ரூ.3,000 வீதம் ரூ.238.77 கோடி மதிப்பீட்டிலான பொங்கல் பரிசு தொகுப்பிற்கான பொருட்கள் வழங்கப்படுகிறது. அதற்காக 05.01.2026 முதல் 07.01.2026 வரை ஒவ்வொரு நியாய விலைக்கடை பணியாளர்கள் மூலம் தங்கள் கடைக்கு உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்த நாள் மற்றும் நேரத்தில் வரவேண்டும் என குறிப்பிட்டு வீடு வீடாக சென்று டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கனில் குறிப்பிட்ட தேதியன்று பரிசுத் தொகுப்பினை தங்கு தடையின்றி பெற்றுக் கொண்டு பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பங்களுடன் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்களின் புகழினை சர்வதேச அளவில் அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையிலும், சத்ய தருமசாலைக்கு வருகின்ற ஏராளமான பொதுமக்களின் ஆன்மிக வசதியினை கருத்தில்கொண்டும் சர்வதேச மையமாக தரம் உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அனைத்து தேவைகளையும் அறிந்து புதிய திட்டங்களை ஏற்படுத்தி அரசு துறைகளின் மூலம் துரிதமாக நிறைவேற்றி வருகிறார்கள். இவ்வாறு அரசால் வழங்கப்படும் சேவைகளை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் மேன்மையடைய வேண்டும் என மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார் இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.இளஞ்செல்வி, துணைப் பதிவாளர்கள் எம்.சுகந்த லதா, எஸ்.ரங்க சாமி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---



## சென்னை, மடிப்பாக்கம் 14வது மண்டலம்,மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் இலவச பாடநூல் வழங்கும் விழா

சென்னை, ஜன.09-

பெருநகர சென்னை மாநகராட்சி, 14வது மண்டலம், (07.01.2026) அன்று சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 188வது வார்டுக்கு மடிப்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இலவச பாடநூல் வழங்கும் விழாவில் 188 வது மாமன்ற உறுப்பினர், சாமீனா செல்வம் பள்ளி குழந்தைகளுக்கு பாடநூல் மற்றும் பள்ளி சீருடை வழங்கி இன்றைய குழந்தைகள் தான் நாளைய இளைஞர்கள் இந்தியாவிற்கு தூண்கள் என்று பள்ளி மாணவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், 444 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். பழனி நாடார் அவர்கள் உள்ளார்.



# சிவகங்கை அருகே கிராஃபைட் கனிம வள ஆய்வு: விளைநிலங்களை காக்க கிராம மக்கள் கருப்புக்கொடி போராட்டம்

சிவகங்கை, ஜன.09-

சிவகங்கை அருகே உள்ள இலுப்பக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் மத்திய அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள கிராஃபைட் கனிம வள ஆய்விற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொதுமக்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விவசாய நிலங்களை குறிவைக்கும் மத்திய அரசு?

சிவகங்கை மாவட்டம், அரசனூர் கிராமத்தை அடுத்துள்ள இலுப்பக்குடி பகுதியில் முப்போகமும் விவசாயம் செழிக்கும் நிலங்கள் உள்ளன. இங்கு ஏழை, எளிய மக்கள் விவசாய த்தையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண் டுள்ளனர். ஏற்கனவே இப்பகுதியில்:

* சுமார் 200 ஏக்கரில் மத்திய அரசின் இந்தோ திபெத்திய எல்லை பாதுகாப்புப் படை (ITBP) பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது.

* சமீபத்தில் தமிழக அரசின் சிட்கோ (SIDCO) தொழில் பூங்காவிற்காக சுமார் 300 ஏக்கர் நிலம் கையகப்படுத் தப்பட் டுள்ளது.

இந்நிலையில், இந்திய சுரங்கத் துறை மேற்கொண்ட ஆய்வில் இப்பகுதியில் அதிகப்படியான கிராஃபைட் தாதுக்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதற்காக சுமார் 600 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் முதற்கட்டப் பணிகளை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

திரண்ட கிராம மக்கள் அரசியல் கட்சிகள் ஆதரவு

தங்களது வாழ்வாதாரமான விளைநிலங்கள் பறிபோவதைத் தடுக்க அரசனூர், இலுப்பக்குடி, குமாரபட்டி ஆகிய மூன்று ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இலுப்பக்குடியில் திரண்டனர். வீடுகள் மற்றும் பகுதிகளில் கருப்புக்கொடி கட்டி தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில்:

* பி. ஆர். செந்தில்நாதன் (சட்டமன்ற உறுப்பினர்)

* சாமி. நடராஜன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர்)

* முத்துராமு (விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர்)

* மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி, விசிக நிர்வாகிகள், மாவட்ட கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

ஆட்சியர் அலுவலகம் நோக்கி முற்றுகைப் போராட்டம்

ஆர்ப்பாட்டத்தில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் மற்றும் விவசாய சங்கச் செயலாளர் சாமி. நடராஜன் ஆகியோர், “இந்தத் திட்டத்தை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தாவிட்டால், விவசாயிகளையும் பொதுமக்களையும் திரட்டி வரும் 20ஆம் தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி மனு கொடுக்கும் மாபெரும் போராட்டம் நடத்தப்படும்“ என எச்சரித்தனர்.

முன்னதாக, குமாரபட்டி மேனாள் கவுன்சிலர், ஊராட்சி மேனாள் தலைவர்கள் மற்றும் கிராம அம்பலகாரர்கள் இணைந்து இந்த ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் நேற்றைய தினம் காணொளி வாயிலாக துவக்கி வைத்த “உலகம் உங்கள் கையில்” எனும் திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி நேற்று பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி அரசு கலை கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கினார் இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, திட்ட இயக்குனர் பாபு வருவாய் கோட்டாட்சியர் சரவண பெருமாள் வட்டாட்சியர் வரதன் பரமக்குடி அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் ராஜா கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜெயக்குமார், வேந்தோணி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் துரைராஜ், ராமநாதபுரம் திமுக மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பாஸ்கர பாண்டியன், மற்றும் அரசு அதிகாரிகள், ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பாலன்நகரில் Pcms 2 நியாய விலைக்கடையில் பொங்கல் பரிசு தொகுப்புடன், ரொக்க பணம் 3000 சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் தொடங்கி வைத்தார். நிகழ்வில் பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது.கருணாநிதி மற்றும் வருவாய் கோட்டாட்சியர் சரவண பெருமாள் வட்டாட்சியர் வரதன் வட்ட வழங்கல் அலுவலர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களால் இன்று குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு 3000 ஒரு முழு செங்கரும்பு ஒரு கிலோ சர்க்கரை ஒரு கிலோ அரிசி வேட்டி சேலை M.M.577 வெள்ளாள விடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் நியாய விலை கடையில் வழங்கப்பட்டன குடும்ப அட்டைதாரர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்தியுள்ளனர் -






# கீழக்கோட்டையில் தேசிய பள்ளி சிறார் உடல் நலத் திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம் நடைபெற்றது

காளையார் கோவில், ஜன.09-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் தேசிய பள்ளி சிறார் உடல் நல திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். மருத்துவர் சுதர்சன் மருத்துவர் வெங்கடேஸ்வரி மாணவ மாணவிகளின் உடல்நலன்களை பரிசோதித்து மருத்துவ அறிவுரைகள் வழங்கினர். தடுப்பூசி சேவைகள் நல குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தல் மற்றும் பரிந்துரை செய்தல் கண்பார்வை குறைபாட்டினை கண்டறிந்து இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்குதல் வாராந்திர இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல் தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்குதல் மாதவிடாய் நாட்களில் சுகாதாரமான நாப்கின்கள் வழங்குதல் அயோடின் குறைபாடு பற்றி விழிப்புணர்வு அளித்தல் மற்றும் பரிசோதனை செய்து காண்பித்தல் நடத்தையில் மாற்றம் ஏற்படுத்துதல் புகையிலை இல்லா பள்ளி வளாகத்தை உறுதிப்படுத்துதல் டெங்கு போன்ற கொசுக்களால் பரவும் நோய்கள் பற்றி விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் பள்ளிகளில் சுகாதாரம் பேணுதல் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு சுகாதாரத்தை உறுதி செய்தல் வளரிளம் பருவ சேவையில் மாணவர்களின் பங்குகளை பற்றி எடுத்து கூறுதல் மனநல ஆரோக்கியத்திற்கான விழிப்புணர்வு தொற்ற நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஹீமோகுளோபின் குறைபாட்டிற்கான பரிசோதனை இவற்றையெல்லாம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என்பதை தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி எடுத்துக் கூறினார். செவிலியர்கள் லில்லி கிறிஸ்டி மஞ்சுளா மருந்தாளுநர்கள் சுகாசினி யாசர்அரபத் சிறப்பாக பணியாற்றினர். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியைகள் வாசுகி கமலம்பாய் ஓட்டுனர்கள் செல்வராஜ் மணிகண்டன் கலந்து கொண்டனர்.






# மாற்றுக் கட்சியில் இருந்து திமுக கட்சிக்கு இணையும் நிகழ்வு

தேனி, ஜன.09-

தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் திரு தங்க தமிழ்செல்வன் M.A அவர்கள் தலைமையில் தேனி வடக்கு ஒன்றியம் PC பட்டியில் மாற்றுக் கட்சியில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணையும் நிகழ்வு மற்றும் அறுசுவை விருந்து வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் பெரியகுளம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு கே எஸ் சரவணகுமார் BE MBA அவர்கள் மாநில தீர்மான குழு தலைவர் திரு ஜெயக்குமார் (Ex மாவட்ட கழக செயலாளர்) அவர்கள் தேனி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு சக்கரவர்த்தி LLB அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பிசி பட்டி பேரூர் மன்ற தலைவர் திரு மிதுன் சக்கரவர்த்தி அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேரூர் கழக செயலாளர் திரு செல்வராஜ் அவர்கள் மாநில மாவட்ட நகர ஒன்றிய பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் சார்பு அணியின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

# பிஹாரில் பள்ளி ஆசிரியர்களுக்கு தெருநாய் கணக்கிடும் பணி

பாட்னா, ஜன.09-

பிஹாரின் சசாரம் மாநகராட்சி தனது எல்லைக்குள் செயல்படும் அனைத்து பள்ளிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

அதில், தெரு நாய்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் பொறுப்பு அலுவலர் ஒருவரை (ஆசிரியரை) நியமிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. இதன்படி பள்ளி வளாகத்தைச் சுற்றிலும் காணப்படும் தெரு நாய்களின் எண்ணிக்கை, அவற்றின் தற்போதைய நிலை குறித்து மாநகராட்சிக்கு ஆசிரியர்கள் தெரிவிக்க வேண்டும்.

இதுகுறித்து சசாரம் மாநகராட்சி ஆணையர் விகாஸ் குமார் கூறுகையில், “அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டமிடலுக்கு உதவுவதற்காக தெரு நாய்கள் குறித்த துல்லியமான, உள்ளூர் அளவிலான தகவல்களை சேகரித்து வழங்கிட பொறுப்பு அலுவலரை நியமிக்குமாறு கல்வி நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன” என்றார். ஆசிரியர்களுக்கு இதுபோன்ற பணிகள் தரப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு இ பிரிவில் படிக்கும் மாணவன் சேதுபதி கீழே கிடந்த செல்போனை எடுத்து பரமக்குடி காவலரிடம் கொடுத்து உரியவரிடம் படைக்கப்பட்டது நேற்று மாணவனின் நேர்மையை அனைவரும் பாராட்டி வருகின்றனர்



# பழனிக்கு பாதயாத்திரை நடந்து வரும் சாலையை தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் சுத்தம் செய்தனர்

திண்டுக்கல், ஜன.09-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தமிழக வெற்றி கழக நிர்வாகிகள். பழனி முருகனின் 3ம் படை வீடான பழனிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். தைப்பூசம், வைகாசி விசாகம், பங்குனி உத்திரம் என வருடம் முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். இங்கு குறிப்பாக கேரளாவில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர்.

தற்போது சபரிமலை சீசன் நடைபெற்று வருவதால் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் இருந்தும் ஐயப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து செல்லும் பக்தர்கள் ஆன்மீக பயணமாக பழனி கோவிலுக்கும் வருகின்றனர் வரும் பாதை இடும்பன் கோவில் சாலை குண்டும் குழியுமாக சிறு சிறு கல்கள் நிறைந்த பாதையாக. கரடு முரடாகவும் இருப்பதால் பக்தர்கள் நடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள் ஆதலால் திண்டுக்கல் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நகரச் செயலாளர் மீதுன் மாவட்டத் துணைச் செயலாளர் சிவா மற்றும் கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவ்விடத்தை சுத்தம் செய்தனர்.



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பேரூராட்சிக்கு ரூபாய் 9 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான டிராக்டரை பயன்பாட்டு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161